SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்
செப்டம்பர் - 2019

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettagam.com
tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040
**Contact : 044-43533445 | 044-45543082.**
**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# செப்டம்பர் - 2019

## தமிழ்நாடு

1. **தமிழக முதலமைச்சரின் வெளிநாட்டு பயணங்கள்:**

| | |
|---|---|
| **நியூயார்க், அமெரிக்கா** | தமிழ் நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு புலம் பெயர்ந்தோரிடமிருந்து முதலீடுகளை ஈர்க்க முதலமைச்சர் "யாதும் ஊரே" எனும் திட்டத்தை தொடங்கி வைத்தார். |
| **நியூயார்க், அமெரிக்கா** | அமெரிக்க தொழிலதிபர்களை முதலீடு செய்யுமாறு முதலமைச்சர் அறிவுறுத்தினார். |
| **அமெரிக்கா** | சான்பிரான்சிஸ்கோவில் உள்ள ப்ளும் ஆற்றல் ஆலையை முதலமைச்சர் பார்வையிட்டார். |
| **அமெரிக்கா** | சான்பிரான்சிஸ்கோவில் உள்ள டெஸ்லா மின்னணு மகிழுந்து அலகை முதலமைச்சர் பார்வையிட்டார். |
| **அமெரிக்கா** | லாஸ் ஏஞ்சல்ஸின் அனாஹெய்ம் நகரில் உள்ள கழிவு-நீர் மறுசுழற்சி நிலையத்தை முதல்வர் பார்வையிட்டார். |
| **லண்டன், UK** | கிங்ஸ் மருத்துவமனை தமிழ்நாட்டில் "அவசர ஆம்புலன்ஸ்" (Copter Ambulance) சேவையைத் தொடங்க உத்வேகம் அளிக்கிறது. |
| **சல்போல்க், UK** | முதல்வர் இங்கிலாந்தின் சஃபோல்கில் உள்ள ஐபி ஸ்விட்ச்-ஸ்மார்ட் கிரிட் தொழிற்சாலையை பார்வையிட்டார் மற்றும் சூரிய மற்றும் காற்று ஆற்றல் உற்பத்தி முறையை பார்வையிட்டார். |
| **ஐக்கிய அரபு அமீரகம்** | துபாயில் "வர்த்தக தலைவர்கள் மன்றம்" கூட்டாக நடத்திய முதலீட்டாளர்கள் கூட்டத்தில் முதல்வர் கலந்து கொண்டார். |

2. தமிழ்நாடு இசை மற்றும்ற நுண்கலை பல்கலைக்கழகம் **"தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம்"** என மறு பெயரிடப்பட்டது.

3. தம் பேருந்து இருக்கும் இடத்தை கண்டறிதல் மற்றும் அணுகுதலுக்கான செயலி **(Locate and Access My Bus (LAMB) App) :** அரசு பேருந்துகள் இருக்கும் இடத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்க பொது மக்களுக்கான புதிய செயலியை மாநில அரசு உருவாக்கி வருகிறது.

4. சி.சி.டி.வி. கண்காணிப்பு திட்டமான "மூன்றாம் கண்" திட்டத்தை பொதுமக்களின் கூட்டுடன் திறம்பட செயல்படுத்தியதற்காகவும், போக்குவரத்து மீறல்களுக்கு எதிராக அபராதத்தை பணமாக செலுத்தாமல் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதற்காகவும் சென்னை பெருநகர காவல்துறை இரண்டு ஸ்கோச் விருதுகளைப் பெற்றுள்ளது.

5. நீதிபதி வி.கே.தஹில்ரமணி பதவி விலகிய பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தின் செயல்படும் தலைமை நீதிபதியாக நீதிபதி வினீத் கோத்தாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

6. கீழடி கண்டுபிடிப்புகளை படிப்பதற்கான மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகமாக மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

7. சினிமா தியேட்டர்களுக்கு 100% ஆன்லைன் டிக்கெட் முறையை செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

8. மாநில மேற்கூரை சூரிய ஈர்ப்பு குறியீட்டில் (SARAL) தமிழகம் 10-வது இடத்தில் உள்ளது.

9. ஸ்டார் 3.0 (பதிவு செய்தலில் எளிமையான மற்றும் வெளிப்படையான நிர்வாகம்) திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட பதிப்பை தமிழக அரசின் பதிவுத்துறை ஒரு வருடத்திற்குள் செயல்படுத்தவுள்ளது.

10. உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

11. 2018-19-ம் ஆண்டில் தமிழ்நாடு 8.17% பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது.

12. தமிழ்நாடு அரசு தமிழக மின்னணு வாகனக் கொள்கையை 2019 செப்டம்பர் 16ஆம் தேதி வெளியிட்டது.

13. வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்கா (AAZP) உலக உயிரியல் பூங்காக்கள் மற்றும் மீன்வள சங்கத்தில் நிறுவன (WAZA) உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

14. "நடந்தால் வாழி காவிரி திட்டத்தை" செயல்படுத்த 16 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

15. இந்தியாவின் முதல் ஆகாய சைக்கிள் பூங்கா விரைவில் இமாச்சல பிரதேசத்தின் மணாலிக்கு அருகிலுள்ள குலாபா பகுதியில் திறக்கப்படும்.

## *தேசம்*

1. **தத்பார் (Tatpar App) செயலி** : டெல்லி காவல்துறை தனது குடிமக்களுக்கு பாதுகாப்பு மற்றும் வசதியான 24 × 7 ஆன்லைன் முறையிலான சேவைகளை வழங்க "தத்பார் செயலியை" அறிமுகப்படுத்தியுள்ளது.

2. பிரதமர் நரேந்திர மோடி **ஸ்வச்சதா ஹே சேவா 2019**-னை மதுராவில் செப்டம்பர் 11, 2019 அன்று தொடங்கினார்.

3. **காசநோய் ஹரிகாதேஷ் ஜீடிகா பிரச்சாரம்** : இந்தியாவிலுள்ள கொடுமையான காசநோயை அகற்றுவதற்காக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் இந்த பிரச்சாரத்தை தொடங்கினார்.

4. டெங்குவிற்கு எதிராக போராட டெல்லி அரசாங்கம் தேசிய தலைநகரில் "சாம்பியன்ஸ் பிரச்சாரத்தை" தொடங்கியுள்ளது.

5. சாலையோர வியாபாரிகள் மற்றும் வணிகர்களுக்கு தலைநகர் முழுவதும் சட்டரீதியான பாதுகாப்பை வழங்குவதற்காக, சாலையோர வியாபாரிகள் சட்டம், 2014-னை அமல்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக டெல்லி திகழ்கிறது.

6. அசாமிலுள்ள தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (NRC) இறுதி பதிப்பு 2019 ஆகஸ்ட் 31 அன்று அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.

7. புதிய மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் கடுமையான தண்டனை விதிகளுடன் 2019 செப்டம்பர் 1 முதல் நடைமுறைக்கு வருகிறது.

8. 2022-க்குள் அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் அவசர மருந்துத்துறை இருப்பதை கட்டாயமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

9. துணைக் குடியரசுத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு, நாட்டின் மிக நீளமான மின்மயமாக்கப்பட்ட ரயில் சுரங்கப் பாதையை (வெங்கடாச்சலம் மற்றும் ஒபுலவரி பள்ளிக்கு இடையில்) செப்டம்பர் 1, 2019 அன்று திறந்து வைத்தார்.

10. காதி மற்றும் கிராம தொழிற்துறை ஆணையமானது முதன்முறையாக 'டெரகோட்டா (சுடுமண்) அரைக்கும் இயந்திரத்தை (கிரைண்டரை) வாராணாசியில் உள் சேவாபுரியில் வெளியிட்டது.

11. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பல்கலைக்கழக மானியக் குழுவால் வடிவமைக்கப்பட்ட வாழ்க்கைத் திறன்களுக்கான பாடத் திட்டத்தை (ஜீவன் கௌசல்) அறிமுகப்படுத்தியுள்ளார்.

12. ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனாவின் கீழ் அதிக எண்ணிக்கையிலான தங்க அட்டைகளை விநியோகித்த முதல் மாநிலமாக ஜம்மு-காஷ்மீர் உருவாகியுள்ளது.

13. நகரப் பேருந்துகள் மற்றும் மெட்ரோ ரயில்களில் பெண்கள் இலவசமாக பயணிக்க உதவும் இலவச பயணத் திட்டத்திற்கான ஒப்புதலை தில்லி அரசு வழங்கியுள்ளது.

14. மத்திய அரசாங்கம் இ-சிகரெட்டுகளின் தயாரிப்பு, உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி இருப்பு, போக்குவரத்து, விற்பனை மற்றும் விளம்பரங்களுக்கு தடை விதிக்குமாறு அறிவித்தது.

15. அசாம் அரசாங்கம் "அப்போனார் அபோன் கர்" என்ற வீட்டுக்கடன் மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது (Aponar Apon Ghar).

16. இந்தியாவின் முதலாவது தேசிய நுண்ணுயிர் எதிர்ப்பு மையம் கொல்கத்தாவில் அமைக்கப்பட உள்ளது.

17. இந்தியாவின் மிக உயரமான விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கோபுரம் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் திறக்கப்பட்டது.

18. உத்திரப்பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உலக 0043 தர தேசிய போலீஸ் பல்கலைக்கழகத்தை அமைக்க உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

19. மேகாலயா முதலமைச்சர், அம் மாநிலத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் வேலைக்கு நடந்தே செல்லுங்கள் (WWW) என்ற பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

20. இராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட் இந்தியாவின் முதலாவது தகவல் போர்டலான **ஜன் சூச்னா போர்ட்டல் (Jan Soochna Portal)** – 2019னை செப்டம்பர் 13, 2019 அன்று திறந்து வைத்தார்.

21. பிரதமர் நரேந்திர மோடி **மதுராவில் தேசிய விலங்கு நோய் கட்டுப்பாட்டு திட்டம் மற்றும் செயற்கை கருவூட்டல் திட்டத்தை** தொடங்கி வைத்தார்.

22. உத்தரகாண்ட் அரசு கார்பெட் புலிகள் காப்பகத்திற்காக சிறப்பு புலிகள் படை **a Special Tiger Force (STF)** அமைக்க முடிவு செய்துள்ளது.

23. குழந்தைகள் மற்றும் பெண்களின் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக யுனிசெஃப் உடன் இணைந்து ஒடிசா மாநில அரசு **"டிக்கி மௌசி" (Tikki Mausi)** என்ற சின்னத்தை அறிவித்தது.

24. அரசு மருத்துவர்கள் தனியார் மருத்துவமனை நடத்துவதை தடை செய்ய ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது.

25. வளர்ந்து வரும் தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு செயல்பாடுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் 2020-னை செயற்கை நுண்ணறிவு ஆண்டாக (AI) அறிவிக்க தெலுங்கானா அரசு முடிவு செய்துள்ளது.

26. **ஹிமாச்சலப் பிரதேச அரசு** முக்ய மந்திரி **சேவா சங்கல்ப் ஹெல்ப்லைன் 1100**-னை பொதுமக்களின் குறைகளை விரைவாகவும் மற்றும் குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளும் தீர்க்க அறிமுகப்படுத்தியுள்ளது.

27. இந்தியாவின் 2-வது நதி பல்நோக்கு முனையம் (MMT) பிரதமர் நரேந்திர மோடியால் ஜார்கண்டின் சாஹிப்கஞ்சில் 2019 செப்டம்பர் 12-ம் தேதி திறக்கப்பட்டது.

28. திட்டமிடப்பட்ட சாலைகள் மூடல் திசை திருப்புதல், சாலை விபத்து தொடர்பான போக்குவரத்து எச்சரிக்கைகள் போன்ற போக்குவரத்து தொடர்பான தகவல்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நிகழ்நேரத்தில் தெரிவிப்பதற்காக குருகிராம் போக்குவரத்து காவல்துறை கூகுள் வரைபடங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

29. பெண்கள் தொழில்முனைவோராதலை துரிதப்படுத்தவும் மற்றும் பாலின சமத்துவத்தைப் பெறுவதற்கும் இந்தியாவின் முதல் சர்வதேச மகளிர் வர்த்தக மையத்தை (iWTC) கோழிக்கோட்டில் அமைக்க கேரள அரசு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

30. விலங்கு ஆராக்கியத்திற்கான OIE உலக அமைப்பால் **பறவைக் காய்ச்சல் (ஏவியன் இன்ஃபுளுயன்சா-$H_5N_1$)** இல்லாத நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேசம்

1. காந்தி சூரிய பூங்கா; செப்டம்பர் 24, 2019-அன்று நியூயார்க்கில் உள்ள ஐ.நா.தலைமையகத்தில் 50 கிலோவாட் திறன் கொண்ட 1 மில்லியன் டாலர் மதிப்புடைய “காந்தி சூரிய பூங்காவை” பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

2. மிச்சிகனுக்கு பிறகு நறுமணச்சுவையுடைய இ-சிகரெட்களுக்கு தடை விதித்த 2-வது அமெரிக்கா மாநிலம் நியூயார்க் ஆகும்.

3. **தாமரை கோபுரம்** : தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமான “தாமரை கோபுரம்” இலங்கையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

4. தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின்சக்தி பண்ணையை வியட்நாம் திறந்து வைத்துள்ளது. இது ஆண்டுதோறும் 688 மில்லியன் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

5. எளிய சிகரெட் பேகேஜிங்கை நீக்கிய ஆசியாவின் முதல் நாடு தாய்லாந்து.

## பொருளாதாரம்

1. உலகின் சிறந்த மற்றும் பழமையான பயண நிறுவனங்களில் ஒன்றான தாமஸ்குக் திவாலாகிவிட்டது.

## விளையாட்டு

1. டெல்லி மற்றும் மாவட்ட கிரிக்கெட் சங்கம் (DDCA) அச்சங்கத்தின் முன்னாள் தலைவரான அருண்ஜெட்லி நினைவாக ஃபெரோஷா கோட்லா ஸ்டேடியத்தை “அருண்ஜெட்லி ஸ்டேடியம்” என்று பெயர் மாற்ற முடிவு செய்துள்ளது. அருண் ஜெட்லி 1999 முதல் 2013 வரை அச்சங்கத்தின் தலைவராக இருந்தார்.

2. மாண்டலேயில் நடந்த ஐ.பி.எஸ்.எஃப் உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பை பங்கஜ் அத்வானி வென்றார்.

3. செப்டம்பர் 18, 2019 அன்று கஜகஸ்தான் நாட்டின் நூர்சுல்தானில் நடந்த உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் வினேஷ் போகத் வெண்கலப் பதக்கம் வென்றார்.

4. 2020 ஒலிம்பிக்கிற்கு தேர்வான முதல் இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் ஆவார்.

5. 2019 வியட்நாம் ஓபன் பட்டத்தை சௌரப் வர்மா வென்றார்.

6. ஸ்பெயின் அர்ஜெண்டினாவை தோற்கடித்து ஃபிபா (FIBA) கூடைப்பந்து உலகக் கோப்பையை வென்றது.

7. கொழும்பில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி வங்கதேசத்தை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

8. டெஹ்ரானில் நடைபெற்ற 2019 ஆசிய ஆண்கள் கைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் பட்டத்தை ஆஸ்திரேலியாவை வீழ்த்தி ஈரான் வென்றது.

9. இருபது-ஓவர் சர்வதேச கிரிக்கெகெட் போட்டிகளில் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பந்து வீச்சாளர் என்ற பெருமையை லசித் மலிங்கா பெற்றார்.

10. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிக இளம் வயதிலேயே கேப்டன் ஆனார் ரஷீத் கான். (ஆப்கானிஸ்தான்)

## *மாநாடு மற்றும் கருத்தரங்குகள்*

| மாநாடு / கருத்தரங்குகள் | காரணம் / கருத்துரு / வெளிப்பாடு | இடம் / யாரால் நடத்தப்படுகிறது |
|---|---|---|
| **2019 இந்தியா பசிபிக் பாதுகாப்பு அமைச்சர்கள் கருத்தரங்கு** | கருத்துரு : "Collaboration in a free and Open Indo – Pacific" | பாங்காக், தாய்லாந்து |
| **17-வது பசுமை கட்டிடங்கள் காங்கிரஸ்** | | ஹைதாரபாத் |
| **ஐக்கிய நாடுகள் காலநிலை செயல்பாட்டு உச்சி மாநாடு** | | நியூயார்க் |
| **5-வது இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா** | கருத்துரு : "RISEN India – Research, Innovation and Science Empowering the Nation" | கொல்கத்தா |
| **முதலாவது ஹெலிகாப்டர் உச்சி மாநாடு** | ஹெலிகாப்டர் மூலம் இணைப்பை விரிவுபடுத்துதல் உத்தரகாண்டில் டெஹ்ராடூனில் உள்ள ஹெலிட்ரோமில் நடைபெற்றது. | மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் |
| **சைபர் கிரைம் விசாரணை தொடர்பான முதலாவது தேசிய மாநாடு** | சைபர்கிரைம் தொடர்பான சவால்கள் மற்றும் தீர்வுகளைக் கண்டறிவதற்கான வழிகள் குறித்து விவாதிக்க புலனாய்வாளர்கள், வழக்கறிஞர்கள், தடயவியல் நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து ஒரு தளத்தை உருவாக்குதல். | புதுடெல்லி |

## திட்டங்கள் / யோஜனாக்கள்

| திட்டங்கள் / யோஜனா | நோக்கம் / செய்திகளில் வெளிவரக் காரணம் | அமைச்சகம் / அமைச்சரவை / மாநிலம் |
|---|---|---|
| **பிரதான் மந்திரி லகு வியாபாரி மான்-தன் யோஜனா** | வியாபாரிகள், வணிகர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் |
| **பிரதான் மந்திரி கிஷான் மான்-தன் யோஜனா** | விவசாயிகள், கடைக்காரர்கள் மற்றும் சுயதொழில் செய்வபர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | பிரதமர் நரேந்திரமோடி |
| **முக்கிய மந்திதி தல் போஷித் யோஜனா** | மாநிலத்திலுள்ள ஏழைகளுக்கு குறைந்த விலையில் பருப்பு வகைகளை வழங்குதல் | உத்தரகாண்ட் |
| **முக்கிய மந்திரி வியாபாரி சாமுஹித் நிஜி துர்கட்னா பீமா யோஜனா & முக்கிய மந்திரி வியாபாரி சஷாதிபுர்த்தி பீமா யோஜனா** | பதிவு செய்யப்பட்ட சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கான காப்பீட்டுத் திட்டங்கள் | ஹரியானா |

## குறியீடுகள்

| குறியீடு | நோக்கம் / வெளியீடு | இந்திய தரவரிசை | முதலிடம் |
|---|---|---|---|
| **உலகளாவிய வாழ்வாதார குறியீடு 2019** | பொருளாதார நுண்ணறிவு அலகு | டெல்லி = 118<br>மும்பை = 119 | வியன்னா,<br>சிரியா = 40 |
| **உலக பயணச் சுற்றுலா போட்டித் திறன் குறியீடு** | | 34 | |
| **உலக டிஜிட்டல் போட்டித் திறன் குறியீடு** | | 44 | |

## குழுக்கள்

| |
|---|
| சில பல்கலைக்கழகங்களால் போலி பட்டங்கள் விற்பனை செய்யப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகளை ஆராய ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவை பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) அமைத்துள்ளது. |
| ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய மத்திய அரசு 5 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர்கள் குழுவை அமைத்துள்ளது. |

## இராணுவப் பயிற்சிகள்

| பயிற்சியின் பெயர் | யாரிடையே நடைபெற்றது | பயிற்சியின் வகை |
|---|---|---|
| 9வது சிலினெக்ஸ் 2019 (SLINEX) | இந்தியா & இலங்கை | கடற்படை பயிற்சி |
| மைத்ரி – 2019 (MAITREE) | இந்தியா & தாய்லாந்து | கூட்டு இராணுவப் பயிற்சி |
| 28-வது இந்தோ-தாய் கார்பெட் (Indo - Thai CORPAT) | இந்தியா & தாய்லாந்து | கடற்படை பயிற்சி |
| டைகர் டிரையம்ப் பயிற்சி Exercise Tiger Triumph | இந்தியா & அமெரிக்கா | முத்தரப்பு இராணுவ சேவை பயிற்சி |
| சிட்மெக்ஸ் – 2019 (SITMEX) | இந்தியா, சிங்கப்பூர் & தாய்லாந்து | கடற்படை பயிற்சி |
| காஸிந்த் – 2019 (KAZIND) | இந்தியா & கஜகஸ்தான் | மலை நிலப்பரப்பில் நடைபெற்ற கூட்டு பயங்கரவாத பயிற்சி |

## திருவிழா

| வ.எண் | திருவிழா | மாநிலம் |
|---|---|---|
| 1. | "வர்ணாபாகிட் – 2019" | கேரளா |

## பாதுகாப்பு மற்றும் விண்வெளி

| பாதுகாப்பு & விண்வெளி | நோக்கம் | நாடு / மாநிலம் / நிறுவனம் |
|---|---|---|
| ஐஎன்எஸ் கந்தேரி | பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஸ்கார்பியன் நீர் மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ். கந்தேரியை இணைத்துக் கொண்டார். | பல்லார்ட் பயர், இந்தியா |
| ராமன் சாட் - 2 மிக நுண்ணிய செயற்கைக் கோள் | (வடிவமைத்தவர் இந்திய மாணவர் அபாஸ் சிக்கா). சூரியன் மற்றும் விண்வெளியிலிருந்து வரும் கதிர் வீச்சை அளவிட இது உபகரணங்களை எடுத்துச் செல்கிறது | நாசா |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

| இனம் / புதிய கண்டுபிடிப்பு | வகை / நோக்கம் | இடம் |
|---|---|---|
| **பண்டிட்ஜஸ்ராஜ்** | சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU) மூத்த பாடகருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 2006 விபி 32 (எண் – 300128) கிரக்கித்திற்கு 'பண்டிட்ஜஸ்ராஜ்' என பெயரிட்டுள்ளது. | |
| **பூசா யஷஸ்வி** (HD - 3226) | வரவிருக்கும் ராபி பருவத்தில் நடவு செய்வதற்காக பூசா யஷஸ்வி (எச்.டி - 3266) என்ற புதிய திறன்மிகு வெற்றியடைந்த கோதுமை வகை வெளியிடப்பட்டது. | இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் |
| **ஜிஞ்ஜிபெர்-ஜிஞ்சர்** | இந்திய தாவரவியல் கணக்கெடுப்பு நிறுவனம் (BSI) இரண்டு புதிய இஞ்சி இனங்களை கண்டுபிடித்துதுள்ளது. | நாகாலாந்து |
| **ஜன் சூச்னா போர்ட்டல்** | | ராஜஸ்தான் |

## புவிசார் குறியீடு

| வ.எண் | புவிசார் குறியீடு | மாநிலம் |
|---|---|---|
| 1. | காஷ்மீரின் புகழ்பெற்ற குங்குமப்பு | காஷ்மீர் |
| 2. | ஸ்ரீவில்லிப்புத்தூர் பால்கோவா | தமிழ்நாடு |

## விருதுகள்

| விருதுகள் / பரிசுகள் | நபர் / நிறுவனங்கள் |
|---|---|
| **சர்தார் பட்டேல் தேசிய ஒற்றுமை விருது** | "சர்தார் பட்டேல் தேசிய ஒற்றுமை விருது" இந்திய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு பங்களிப்பு அளித்த உயரிய குடிமை விருது. |
| **தாதாசாகேப் பால்கே விருது 2019** | அமிதாப் பச்சன் |
| **உலகளாவிய இலக்கு விருது** | பிரதமர் நரேந்திர மோடி |
| **வெவ்வேறு பிரிவுகளில் 3 தேசிய சுற்றுலா விருதுகளை ஆந்திரப் பிரதேசம் பெற்றது** | ➢ விரிவான சுற்றுலா மேம்பாட்டில் சிறந்த மாநிலம்<br>➢ ஆங்கிலத்தில் வெளியிடுவதில் சிறந்து விளங்குகிறது. |

| | |
|---|---|
| | ➢ சிறந்த சுற்றுலா நட்பு ரயில் நிலையம் (விசாகப்பட்டினம்) |
| **கோவா மற்றும் மத்தியப் பிரதேசம்** | சாகச சுற்றுலா பிரிவில் கூட்டு வெற்றியாளர்கள் |
| **உத்தரகாண்ட்** | சிறந்த திரைப்பட ஊக்குவிப்பு - நட்பு மாநிலம் |
| **தெலுங்கானா** | தகவல் தொழில்நுட்பத்தை புதுமையாக பயன்படுத்துவதில் சிறந்த மாநிலம் |
| **28-வது சரஸ்வதி சம்மான் விருது** | டாக்டர்.கே.சிவா ரெட்டி |
| **ஊடக விருதுகளில் இந்தியாவின் சிறந்த சக்தி வாய்ந்த பெண்** | கல்லி பூரி |
| **ஃபிபா (FIFA) சிறந்த வீரர் விருது** | லயோனல் மெஸ்ஸி - ஆண் |
| | மேகன் ரேபினோ - பெண் |
| **சர்வதேச ஹ்ராண்ட் டிங்க் விருது** | ஆக்னஸ் கார்ஷிங் |
| **ராஷ்ட்ரியா கேல் புரோட்சஹான் புரஸ்கார் 2019** | ககன் நரங் மற்றும் பவன் கிங் |
| **வாழ்வாதாரத்திற்கான உரிமை விருது 2019** | கிரேட்டா துன்பெர்க் |
| **சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு 2019** | ஆடம் ஹார்பர் |
| **பத்திரிக்கைத் துறையில் கௌரி லங்கேஷ் தேசிய விருது** | ரவீஷ் குமார் |
| **ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் வகுப்பு ஆர்டர் ஆஃப் சையித் II விருது** | நவ்தீப் சிங் பூரி |

## *நியமனங்கள் மற்றும் செய்திகளில் வந்த நபர்கள்*

| நபர்கள் | பொறுப்பு / பதவி |
|---|---|
| **சுனில் கௌர்** | பி.எம்.எல்.ஏ மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவர் |
| **லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே** | இராணுவத்தின் துணைத்தலைவர் |
| **ராஜேந்திர மேனன்** | ஆயுதப்படை தீர்ப்பாயத்தின் தலைவர் |
| **சசி தரூர்** | அயல்நாட்டு விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் உறுப்பினர் |

| | |
|---|---|
| **ராகேஷ் குமார் சிங் பதூரியா** | இந்திய விமானப் படையின் (IAF) புதிய (தலைவர்) தளபதி |
| **செபாஸ்டியன் கோ** | சர்வதேச தடகள கூட்டமைப்பின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| **மதுகர் காமத்** | சுழல் தணிக்கை பணியகத்தின் (ABC) 2019-20ம் ஆண்டிற்கான தலைவர் |
| **பி.லக்ஷ்மண் ஷெட்டி** | ஆந்திரபிரதேசத்தின் முதல் லோக் ஆயுக்தாவாக நியமிக்கப்பட்டார். |

| மாநிலம் | கவர்னர் |
|---|---|
| **தெலுங்கானா** | டாக்டர்.தமிழிசை சௌந்தராஜன் – செப்டம்பர் 8, 2019-ல் பதவியேற்றார். |
| **ராஜஸ்தான்** | கல்ராஜ் மிஸ்ரா |
| **மகாராஷ்டிரா** | பகத்சிங் கோஷியாரி |
| **ஹிமாச்சலப் பிரதேசம்** | பண்ணடாரு தாத்ரேயா |
| **கேரளா** | ஆரிஃப் முகமது கான் |

## *செய்திகளில் வந்த பெண்கள்*

| | |
|---|---|
| **ஷாலிஜா தாமி** | இந்திய விமானப் படையின் முதல் பெண் விமான தளபதி |
| **கிறிஸ்டலினா ஜியார்ஜிவா** | சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் |
| **பி.டி.உஷா** | மதிப்புமிக்க சர்வதேச தடகள கூட்டமைப்பின் (IAAF) மூத்த அனுபவ வீராங்கனை |
| **ரூபா குருநாத்** | தமிழ்நாடு கிரக்கெட் சங்கத்தின் புதிய தலைவர் |
| **நடிகை மாதுாரி தீக்ஷித்** | மகாராஷ்டிராவிலுள்ள தலைமை தேர்தல் அலுவலகத்தின் (CEO) நல்லெண்ண தூதர் |
| **விங் கமாண்டர் அஞ்சலி சிங்** | இந்திய தூதரகப் பணியில் அமர்த்தப்பட்ட முதல் பெண் முப்படை அதிகாரி |
| **சாயா ஷர்மா** | ஆசிய சமூகத்தின் கேம் சேஞ்சர் விருது 2019 |

## புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

| புத்தகம் | எழுத்தாளர் |
|---|---|
| **Listening, learning & leading .....** | M. வெங்கய்யா நாயுடு |
| **"Girl Power : Indian Women Who Broke the Rules"** | நேஹா ஜே ஹிரானந்தனி |
| **"Being Gandhi"** | பரோ ஆனந்த் |
| **"From leeches to Slug Glue : 25 Explosive Ideas that made (and Are Making) Modern Medicine"** | ரூபா ராய் |
| **"The Cousins Thackeray : Uddhav, Raj & the shadow of their sensas"** | தவல் குல்கர்னி |
| **"Turbulence & Triumph : The Modi Years"** | ராகுல் அகர்வால் |
| **"Fortune Turners : The Quartet that Spun India to Glory"** | ஆதித்யா பூஷண் |
| **"Savarkar : Echoes from a forgotten past"** | விக்ரம் சம்பத் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## முக்கிய தினங்கள்

| நாள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| **செப்டம்பர் 2** | உலக தேங்காய் தினம் | கருத்துரு : "Coconut for Family Wellness" |
| **செப்டம்பர் 5** | உலக அறக்கட்டளை தினம் | அன்னை தெரசாவின் இறந்த தினத்தை நினைவு கூறும் வகையில் |
| **செப்டம்பர் 10** | உலக தற்கொலை தடுப்பு தினம் | தற்கொலை செய்வதை தடுக்கவும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் |
| **செப்டம்பர் 14** | ஹிந்தி திவாஸ் | |
| **செப்டம்பர் 15** | சர்வதேச மக்களாட்சி தினம் | கருத்துரு : "Participation" |
| **செப்டம்பர் 16** | ஓசோன் அடுக்கை பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் | கருத்துரு : "32 Years and Healing" |

| | | |
|---|---|---|
| **செப்டம்பர் 17** | முதல் உலக நோயாளி பாதுகாப்பு தினம் | கருத்துரு : "Patient Safety: a global health priority" and the slogan is "Speak up for Patient Safety!" |
| **செப்டம்பர் 18** | உலக மூங்கில் தினம் | மூங்கில் தொழிலை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல் |
| **செப்டம்பர் 21** | அமைதிக்கான சர்வதேச தினம் / உலக அமைதி தினம் | கருத்துரு : "Climate Action for Peace" |
| | உலக அல்சீமியர் தினம் | கருத்துரு : "Raising awareness and challenging the stigma around the disease" |
| **செப்டம்பர் 22** | உலக காண்டாமிருக தினம் | |
| **செப்டம்பர் 23** | உலக புற்றுநோய் இல்லா தினம் | |
| | சர்வதேச சைகை மொழிகள் தினம் | கருத்துரு : "Sign Language Rights for All" |
| **செப்டம்பர் 27** | உலக சுற்றுலா தினம் | கருத்துரு "Tourism and Jobs: a better future for all" |

- ✓ செப்டம்பர் (1 முதல் 7) – தேசிய ஊட்டச்சத்து வாரம்

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS